# ஊடக வெளியீடு

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை-2023(2024)

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான விண்ணப்பங்கள் 2024 ஜனவரி 23 ஆம் திகதியிலிருந்து 2024 பெப்ரவரி 15 ஆம் திகதி வரை நிகழ்நிலை முறைமையில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

02. அதற்கமைவாக சகல பாடசாலை விண்ணப்பதாரிகளும் பாடசாலை அதிபர் ஊடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட முறையிலும் உரிய அறிவுறுத்தல்களுக்கமைய நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். அரச பாடசாலை அல்லது அரசினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலையிலிருந்து விலகி விடுகைப் பத்திரத்தை (விடுகைப் பத்திரம்/கல்வி பீ 59) பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே இப் பரீட்சைக்கு தனிப்பட்ட பரீட்சார்த்திகளாக விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

03. **இவ்வாண்டு தொடக்கம் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காக விண்ணப்பிக்கவிருக்கும் சகல தனிப்பட்ட விண்ணப்பதாரிகளிடமும் தேசிய அடையாள அட்டை இருப்பது கட்டாயமானதாகும்.** தேசிய அடையாள அட்டை இல்லாத 15 வயதிற்கும் குறைவாக உள்ள தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் க.பொ.த. (சா.தர)ப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு எதிர்பார்ப்பின் அவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதருவது கட்டாயமானதாகும்.

04. இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோக பூர்வ இணையத்தளங்களான www.doenets.lk அல்லது www.onlineexams.gov.lk/eic என்பவற்றுக்குள் நுழைந்து உரிய அறிவுறுத்தல்களை நன்கு வாசித்து அதற்கமைய பிழையின்றி விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியைப் தேவையேற்படுமிடத்து சமர்ப்பிப்பதற்காக பாதுகாப்பாக தம்வசம் வைத்திருத்தல் வேண்டும். பாடசாலை விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்காக பயன்படுத்த வேண்டிய பயநர் சொல் (user name), கடவுச் சொல் (password) என்பன பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

**2024 பெப்ரவரி 15 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் இப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாது. அத் தினம் நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் நிகழ்நிலை முறைமை நிறுத்தி வைக்கப்படும். எக்காரணத்திற்காகவேனும் விண்ணப்ப முடிவுத் திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதை கவனத்திற் கொள்ளவும். எனவே விண்ணப்பங்களுக்கான இறுதித் திகதிக்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.**

05. இது தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் பின்வரும் தொடர்பு இலக்கங்கள் அல்லது மின்னஞ்சல் முகவரி ஊடாக தொடர்பு கொள்ளமுடியும்.

தொடர்பு இல : 0112784208 / 0112784537/ 0112785922

மின்னஞ்சல் : gceolexamsl@gmail.com

எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர

பரீட்சை ஆணையாளர் நாயகம்

tamilguru.lk